வ
சிவ ம்.




# சுப்பிரமணியர் பேரிலும், பாண்டுரெங்கப் பெருமாள் மீதும் பாடிய சங்கீத வித்வரசக் கீர்த்தனை.

இஃது
அருப்புக்கோட்டையில் வசிக்கும்
மகா-ள-ள-ஸ்ரீ இராமசாமி செட்டியார் அவர்கள் குமாரன்
சங்கீத சாகித்திய வித்வான்

**K. V. R. தருமலிங்கம் செட்டியார் அவர்கள்**
**இயற்றியது.**

---

அருப்புக்கோட்டையைச் சேர்ந்த கஞ்சமாநகரில் வசிக்கும்
மகா-ள-ள-ஸ்ரீ ரா. ம. சுப்பா நாயக்கரவர்கள் குமாரன்
ராமசாமி நாயக்கர் அவர்கள்
வேண்டுகோளின்படி

அருப்புக்கோட்டை
அருப்புக்கோட்டா பிரிண்டிங் பிரஸில்
பதிப்பிக்கப்பெற்றது.

---

1930 [அணா 2

23 JAN
Q2:417
N30
177695

உ

சிவமயம்.





# சுப்பிரமணியர் பேரிலும், பாண்டுரெங்கப் பெருமாள் மீதும் பாடிய நவரசக் கீர்த்தனை.

இஃது
அருப்புக்கோட்டையில் வசிக்கும்
மகா-ள-ள-ஸ்ரீ இராமசாமி செட்டியார் அவர்கள் குமாரன்
சங்கீத சாகித்திய வித்வான்

**K. V. R. தருமலிங்கம் செட்டியார் அவர்கள்**
**இயற்றியது.**

அருப்புக்கோட்டையைச் சேர்ந்த கஞ்சமாநகரில் வசிக்கும்
மகா-ள-ள-ஸ்ரீ ரா. ம. சுப்பா நாயக்கரவர்கள் குமாரன்
**ராமசாமி நாயக்கர் அவர்கள்**
வேண்டுகோளின்படி

அருப்புக்கோட்டை
அருப்புக்கோட்டா பிரிண்டிங் பிரஸில்
பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை] 1929 [அணா 2

596/1930/I
23 JAN
2013 78989

# சாற்றுக் கவிகள்.

அருப்புக்கோட்டை சொக்கலிங்கபுரம்
சு. நா. சங்கரலிங்க சாஸ்திரியார் குமாரர்

## சிவலிங்க சாஸ்திரியார் அவர்கள் இயற்றியது.

எழுசீர்க்கழி நெடில் விருத்தம்.

திருமருவும்புலி கடுக்கை யக்கரவமார்
செஞ்சடைக் கடவுளான
திரிவிழியரன்றனக்கருமை மகவாய்வந்த
சிவசுப்ரமண்யர் மீது
வருமருவு தேவாங்கர் குலதிலகமென்னவே
ஓங்குக வியல்லோனென
வுலகுளோர் புகழ் தருமலிங்கன் மிகவன்போ
டுறைத்த நற் கீர்த்தனைதனை
தருமருவு கஞ்சநகர் பர்மாவிலுபர்கழனி
தக்கநிதியுள்ளோனெனச்
சாற்று சுப்பய்ய ரீவள்மைந்தனெனவரு ராம
சாமி தாஸ்டீக சுகுணன்
அருமையுடனச்சிற் பதித்து நாவலர்முன
மரங்கேற்றி யிந்நூலுறை
ஆசிரியருக்காடை நிதி யீய்ந்து புகழ்தாங்கி
அவனிதனில் வாழ்ந்தனனரோ.

---

அருப்புக்கோட்டை தெற்குத் தெரு மகா-௱-௱-ஸ்ரீ
வ. சி. சு. ரெங்கசாமி செட்டியார் குமாரர்

## சங்கரலிங்கஞ் செட்டியார் இயற்றியது.

எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

மானூர்ந்த செங்கையும் மதியார்ந்த சடையக்கு
மணியார்ந்த மேனியுடைய
மன்றுணின் றுடினோன் மகவாகவந்தெகினர்
மாயில் வருநகப்பிராஜன்
மகளான வள்ளி குஞ்சரியிருமடந்தையர்கள்
மருவு பன்னிரு தோளுடை
வடிவேற்றரித்தகர முருகேசனெனும் வன்ன
மயில் வாகனக் கடவுண்மேல்
வானூர்ந்த பொழில் வளஞ்சேரு மய்யோத்திக்கு
மன்னனூர் தசரதன்றன்
மைந்தனென வந்து மிதிலைக்கரசன் மகடனை
மணஞ் செய்து வனமேகியே
வாலியைய வனத்தே கவிப்படைதனைக் கொண்டு

வஞ்சராவணனை வாட்டி
மாநகரடைந்த பக்ஷிப்பூவு ரகுராமனெனு
மால் பாண்டுரங்கன் மீதுந்
தேனார்ந்த பங்கயங்குவளை நீலோர்ப்பனஞ்
செவ்வல்லி மலிதடாகந்
திசை நான்குமார் நல்லையம்பதியில் வாழுமெழில்
தேவலன் குலமுதித்த
செந்தமிழ்க்கவி நாவலன் தருமலிங்கமன்
செப்பினான் கீர்த்தனையதை
சீர்த்திமிகு பர்மாவிலே கழனியதியுளோன்
திகழ் சஞ்சநகரத்திலும்
மீனார்ந்த கடல்சூழு முலகிலுள்ளோரிவன்
மிக்க பூபாலனெனவே
மெச்சிடப் புகழ்கொண்ட சுப்பயக் குரிசில்தரு
வேள் ராமசாமி யண்ணல்
வேலைவரு மமுதமோ வென்னுமிப் பாடலை
மேன்மையுற வச்சியற்றி
விற்பனர் மிகுத்தசபை தனிலரங்கேற்றியே
மென்மேலும் வாழ்ந்தனனரோ.

---

அருப்புக்கோட்டை தேவாங்கர்குலம் உபாத்தியாயர்
S. நாகலிங்கஞ் செட்டியார் சிஷ்யன், புலவர் நாகப்பஞ் செட்டியார்
வமிஷம், சோமசுந்தரஞ் செட்டியார் மகன்

## நாகப்பஞ் செட்டியார் இயற்றியது.

ஆசிரியப்பா.

தண்குலவு வாரி திச்சூழ்பெரும் பூவிற்
றழைத்த பொன்வண்டிசைக்குந்
தாதலர்ப்பைம் பொழினிரைந்து பல்வளமிகுந்
தனிக் சஞ்சமாநகரினிற்
றிண்குலவுங் கம்மவார்குலமதிற் றிலகமெனத்
திகள் சுப்பாநாயக்கரின்
க்ஷேமமிகு சேய் ராமசாமிவேள்
பர்மாவில் செய்மிகுங் கீர்த்தியுற்றோன்
வண்குலவு குணசீலன் நன்குபுரி வேண்டுகோள்
வாய்மைக்கிணங்கி வள்ளி
மாதுதெய்வானை மகிழ்நாதனறுமுகன் மீது
மாக்ஷிமிகு கீர்த்தனைப்பா
பண்குலவு நல்லைவளர் ராமசாமிக்குரிசில்
பாலன் நற்றருமலிங்கப்
பாவலன் சொற்றமிழ்பாகு கற்கண்டெனப்
பகராலா மினிது மாதோ.

177695



சிவமயம்.

# சுப்பிரமணியர் பேரிலும், பாண்டுரெங்கப் பெருமாள் மீதும் பாடிய நவரசக் கீர்த்தனை.

OFFICE OF THE ... No. 23 JAN 1939 MAD...

## விநாயகர் காப்பு

சீரார்ந்த முக்கணறன் சேய் கந்தநாதன் மிசை
பேரார்ந்த கீர்த்தனை யான் பேசவே யோரார்ந்த
மங்கை வல்லபைத்தாய்க்கி மாகயிலாயங் கொடுத்த
ஐங்கரனம் பொற்கழல் காப்பாம்.

## விநாயகர் கீர்த்தனை

கலிலோகரிஸ்— என்ற மெட்டு

### பல்லவி

கஜமாமுக மொளிர் நவமணியே
காக்க நின்விழி நோக்க—சமயமத — கஜ

### அனுபல்லவி.

சசிசூடி யருளிய தனையா
சதுர் புயநயவரதா—சிந்துரநிற — கஜ

### சரணம்

பாகார்மது கண்டு சர்க்கரைமுப் பழமொடு பாயாசம்
பால்போளியப்பழ முண்டிடும் பாசாங்குசதரனே
மகராஜ ராஜ கணேசா
மனுகுல தருமலிங்கன்—துதிக்குதவும் — கஜ

---

## சரஸ்வதி துதி,

இராகம் காம்போதி,—தாளம் ரூபகம்.

பல்லவி தொடர்ச்சி.

வாணி புஸ்தக பாணியெகின
வாகனிவரு வாயே தாயே நீயே — வாணி

வருந்து மடமையி நாசினி
விருந்து நலமுறவருள்புரி — வாணி

வாரண மொழி வாரியிலெழும்
பூரணியக மீதுளர் தொழும் — வாணி

மலராய னருகினிலுறுநிதி
கலைமகளென வருசரஸ்வதி — வாணி

மாசிலாத மக ராசியே தரள
பூசணிகமல ஆசனிகருணை — வாணி

மங்க ளங்கள் பொங்கு மகரிசி
தங்கு துங்க சபை மகிழுஞ்சி — வாணி

மகத்துவமே மிகுத்தகுணவதி
மலர்ப்பதநி கொடுக்க விதுமதி — வாணி

அனுபல்லவி.

பாணியிலுயர் வீணை தாங்கிய
பாரதியுல கெங்கும் ஓங்கிய
ராணியேகதி நீயெனத்தினம்
நம்புந் தர்மலிங்கன்—துன்பந் தவிர்த்திடும்
நாதாந்த சொரூபி கிர்பாகரி
வேதாந்த மனோகரியாதரி — வாணி

---

## அம்பிகை துதி.

ஸ்ரீரகுவர சுகுணாலயஎன்ற மெட்டு.

இராகம் பயிரவி—தாளம் ஆதி.

பல்லவி.

மாமலை தருசுதை பார்வதே அம்பா
மரகத தேகி மீனலோசனிதய — மாமலை தரு

அனுபல்லவி

அமானை யேந்தி சமானரூபிணி
குமாரகுரு பூந்தமிழ் தேகியுகி — மாமலைதரு

சரணம்

ஆரணி வேணி அகிலசர் வாணி
பூரணி பொழில் நலை தருமலிங்கன் புகழ் — மாமலைதரு

---

# சுப்பிரமண்யர் கீர்த்தனை.

இராகம் பூரி கல்யாணி தாளம் ரூபகம்

பல்லவி.

பூரி கல்யாணி ராகமோக குகா
புண்ணியா சரண்யா கண்யா சுப்ரமண்யா பூரி

அனுபல்லவி

ஆறிரண்டு கய்யா ஆறுமுகத்தய்யா
அக்கிலங்கு மெய்யா அப்பனே சுப்பய்யா பூரி

சரணம்

நித்தியமுநானே துத்தியஞ் செய்தேனே
சத்திபயின்றோனே முத்துக்குமாரனே

வெத்திமயி லோனே அத்திசோதரனே
வுத்தமி தெய்வானை நத்திய சீமானே

ஓதைகள்மேவிய சீதாளவாரியின்
மீதினிலேதுயில் மாதவன்மருகா

ஒப்வமை யில்லாத அற்புத விசாகா
யிப்புவியில் யானுறும் மவத்தை தவிர் யோகா

முப்புரத்தை நீறுசெய்த வர்க்குறைத்தயூகா
குப்பிதள் குறைப்பெண் மகிழ்ப் புணர்ந்தவாகா

சுந்தரா தருமலிங்கன் பைந்தமிட் கெப்போதுஞ்சொந்த
அந்தரர் துயர்தடிந்த யெந்தையேவளமலிந்த

நந்தவன் முஞ்செறிந்த செந்தி நகரிற் சிறந்த
அந்தமுகுந்தளி வந்த யிந்துளமணிந்த கந்தா

யிகநிறை முருகா மகபதிமருகா
திகழ் கிரிக்கருகா பகர்முனி குருகா பூரிகல்

---

ஆடமோடிகல தேற என்ற மெட்டு.

பல்லவி.

சால சீல்முருகேசா சற்வசிலாக்கிய
கொற்றவர் கற்றவர் நற்றவருந்துதி

பல்லவி தொடர்ச்சி

கோலவடிவேலா கொற்றவர் கற்றவர் நற்றவருந்துதி

கொங்கார் குற வணியும் புயபாரா
துங்கா மறைபணி யுங்கழல் தாரும் கோல

கொஞ்சுங் கிளிமொழி குஞ்சரி யோடண
மஞ்சு நடை குற வஞ்சியை மருவிய கோல

கொண்டல் படிந்திடு தெண்டிரை மருவிய
விண்டழ வுந்தழி கொண்ட தயாபர கோல

கொந்துறை பூங்கொடி சந்தன மகில் செறி
நந்தன வனமலி செந்திலுகந் தருள் கோல

குரித்த படிதத்தரித்த வெனசிறை
விரித்து நடமிடு மயில்ப் பரியில் வரும் கோல

கொட்ட மிகுத்ததி நட்டணை செய்திடு
துட்ட சூரப்படை கெட்டிட வெட்டிய கோல

குலமன் பலமன் நலமன் சிலைமன்
குருமன் அருமன் ஒருமன் எனவரு கோல

சரணம்

சித்தம் நாடியாண் நித்தியங் கொண்டாடிடும்
செல்வ மூர்த்தி யல்லவோ

சீதழ மேமன்னு பதமுகந்துதாரா
சேம மேகானி தருமலிங்கன் தியானி மெஞ்ஞானி கோல

---

இராகம்—மத்தியமாவதி...தாளம் ரூபகம்.

பல்லவி

பழநியாண்டவா கண் பாரய்யா உயர் பரமனுதவும்
பாலனே நீலமயூரவை வேலனே கோல மெய்வேலனே பழநி

அனுபல்லவி.

கழனியம் பொழில் வளைசிலைமிசை
கதிரவனென வொளிதருதளி யதிலுறை சரவணபவகுகா பழநி

சரணம்.

கானச்சுற மின்மருவுந் தேகா
காமன் மருசனான யோகா
மீனும்பிகை சுதா நீ வாகா
மேதகு தேவர் துயர் தவிர் யூகா

விரிநிலங் களுளார் வணங்க பெருமை பொங்க யெழிலிலங்க
தருமலிங்கன் மொழியலங்க லணியுமங்க முடையதுங்கா

சத்துரு மடிவுற வயில்விடு
முத்தய சித்தர்கள் தினமடு

சந்தனி கந்தனே வுந்தனை
சிந்தைசெய் மைந்தன் முன் வந்தருள் பழநி

---

இராகம் சுருட்டி—தாளம் ஆதி.

பல்லவி.

நிர்த்தனமிகவே செயுமயில் மேல்வந்து நின்தெரிசனந் தருவாய்
யிதுசமயம் நிர்த்த

அனுபல்லவி

சத்தி சுதாகர சண்முக காங்கேயா
ஜதிமுறை யொடுதக ததிமிதக் கிட்டதக தகதக திகிதிகி கிட்டத
கிட்டத கிட
தத்தி மித தஜ்ஜணுத தகுகுகு ஜெம்தரி ததிங்கிணத்தோம் கிணத்
தோம் கிணத்தோமென நிர்த்த

சரணம்.

சங்கர னருளிய ஜகப்பிர காசா
சதுர்ப்புயன் சோதர னெனு முரு கேசா
துங்கநலே தர்மலிங்கன் துதிக்கருள் புரி யீசா
துஸ்டசுரரை வதைத் திட்டவை வேலுடன்

தொம் தொம் தொம் தொம் தொம் தரி கிட்டதக
நம் தரிகிட்டதக தகதரி கிட்டதக
தாக்கிட தரிகிட கிடத கிடத கிட

தத்த டீங்கு தத்த டீங்கு டீங்குகு
ததணா ததணாதணா கிணத்த கிணத்த கிண
தத்தளாங்கு தித்தளாங்கு தகதிகி

தாக்கிட கிடதக ஜெகிட கிடதக
தாதா கிடதக ததிங்கிணத் தொமெண் நிர்த்த

---

இராகம்பைரவி—தாளம்ரூபகம்

பல்லவி.

ஞானபண்டிதனே யிந்த
நாட்டி ள்ளோர்துயர் ஓட்டிடச்சிக்குமெய் ஞான

அனுபல்லவி.

மோனபிரணவ சோதிசொ ரூபனே
மோதலைவாரிதுயின் மேருன் மருகனே
கானக்குறவள்ளிசேரு முருகனே
கையிரண்டாறுடைவையாபுரி யோனே

காவள மிகுபழ னுபுரி
யாவரு மடிதொழ வலம்வரு
சேவலங்கொடியுடை சீலனே
தேவிமீனும்பிகை பாலனே

தித்திமியெனசிலம்பொலிதரு சித்திரமாமயில்மிசைவரும் ஞான

சரணம்

அஸ்தியைப் பெண்ணுருவாக்கிய நாதனே
அருணகிரிப்பாடல்க்காசைகொள் நீதனே
சித்தசன்மைத்துனனவி நோதனே
சீதளபாதனே தேசப்ரக் யாதனே

திங்களைமருவிய கோபுரம்
எங்கனுந்தினகர னுயிரம்
தங்கிய தெனவொளிர் தளிமிசை
பொங்கம தாயமர் துங்கனே

தண்டாயுதந் தாங்கு கையனே
பண்டார மென்கூறு மெய்யனே
விண்டாதி யர்போற்று மய்யனே
செண்டால்மலை பேர்த்த துய்யனே

ததிகதி கொடுதீரா யிதுசமயநீ வாராய்
அதிவிரை மலர்த்தாரா விதியைச்சிறைசெய்வீரா

தண்டமிழ் தருமலிங்கன் தமிழ்
கொண்டனுதினம்புணிந்தேற்றுமெஞ் ஞானபண்டிதனே

---

இராகம் கமாஸ்,—தாளம் ரூபகம்.

பல்லவி

குமரனிடமென் குறை சொல்வாய் குயிலே
குணங்களொடு மணங்கொள் குறவணங்கினுட னிணங்கியனை குமர

பல்லவி தொடர்ச்சி

கோதிலாத வேதகீத மோது செந்திலாதிபா வென் குமர

குட்டிச்சிறை யிட்டிடுபல னெட்டுத்திசை மெச்சிடு நல குமர

குஞ்சரிக்கி நேசனைத்துதியடியர் நெஞ்சகத்தில் வாசனை
[கழுகுமலை குமர

கோகனகமலரனை மருகனைத்திரு
தோகைமயில்மிசை ஒயிலுடன் விரைவினில்வரு குமர

குற்றமற்ற செந்தமிழருணகிரி
நற்றமிழ்க் குகந்த கந்தனைக்கவுரி
பெற்றமைந்தனைத் தினமுந்துதிபுரி
உத்தமர் வசித்திடுந் தென்பரங்கிரி குமரனிடமென்

தோகையரு

குறிஞ்சிநில மெங்கெங்கினுங் கோயிலாய்க் கொண்ட கோலமயி லார்
[ந்த வேலன்
வருஞ்சனங்கள் வுரும்பிணிநைய வாட்டியென்றும் கருணைமழை வழங்
[கச் சீதளப் பொய்கை வந்தசீலன்

கும்பல் கும்பலாகவரு அன்பர்கள் பஜனைபெரு இன்பனை அம்பிகை தரு
சம்ரம சண்முக குகனெனுமுத்து குமரனிடமென்
குறைசொல்வாய் குயிலே

அனுபல்லவி.

அமரர் சிறையை யகற்றுந்தீர ன்
அடிதொழு மன்பர்க் கருளுதார ன்
இமைகிரி இறை சுதை குமார ன்
ஏரம்பன்றம் பியெனு நீபத்தார ன்
எகினமண் மருக கம்பீர ன்
அகில மெங்கினு மதிகார ன்

யீசன், முருகேசன், பவநாசன், சிலைவாசன்
ஏதுபாரா முகமோ என்மீதினி விதுவரைவுள மிரங்
காதவிதம் நானறியேன் சாதனையேதோ தெரியேன்
இந்தார் பொழில் நலை தருமலிங்கன் சொல்
பைந்தாரணி சரஹணப வசிவ குமரனிட மென்

---

கோஞ்சம் சங்கடமா...யென்ற மெட்டு

பல்லவி

வந்துந்தன்பதந்தா எழில்
வையாபுரியுறை அய்யா யீரார்கையா வந்

மிக—அந்தமிகுமயி லுந்தியெழியன்முன் வந்

மத—தந்திபயின் றமடந்தைமான்சேயோடு
வயற்—தேங்கமழ்பூம்பொழிலிடையொரு வேங்கையாயோங்கிய
காங்கேயா வந்

பசும்—பூங்கொடியாங்குறமாதுடனுங்குரவாடுபுயாங்கனே வந்

மதி—சூடினோன் கூத்தாடினோன்மறைதேடினோன்பாலனே வேலனே

உனை-நாடினேன் துதிபாடினேன்புகழ்ந்தாடினேன் துயரோடிடும்படி

அதி—மாலைத்தரு தாலத்துயற் சிலக்கிரிவேலித்ததி வந்

எகு—வாலைகனல்போலத் துயற்மேவிட்டுழல்வோனுகுமுன் வந்

துதி—பத்தர்மிசை நித்தமனம்வைத்தருள்செய் முத்தயனே வந்

விடை—யத்தனிடமுற்றகனிபற்றமயில்நத்திய வா வங்

முனப்—வெந்திறலசுரன்றனை கிரியைத்தனில் வதை கந்தனேததி வங்

உன்—தந்தையனையிடஞ் சொல்பிரணவந்தனையுணர்சுந்தரனேநீ வங்

ஒலி--கடலிடையுறுகுசையெனமனமிடைவுறுகடையன்றன் மிடியற

விரி—திடவரைநெரிபடபந்தினி லறைகொடுமிறைவனே யெந்தன்முன்

திரு—பகலவனைநிகர்மணிகுலவிய சண்முகநதியனையிச்செகமய
லொழிய வங்

மா—தகலிகை கலுருவகலநிதிபதமுகில்நிறனருடை மருகாமுருகையா

சரணம்

வண்டடர் சோலையும் வாழைவருக்கைமா
விண்டளவும்பழநிப்பதி மேவி ய
தெண்டுகொத்தனே தேவர்சேனாப தி
தேவாயெனைக்காவாகதிதா வாபூவோர்பணிகுண வங்

வஞ்சனைசெய்யாதெனையாள்நா தா—கமழ்
கஞ்சமலர்ப்பாதனேயிவ்வா தா—அதி
வளநேர்பொதிகாசலமதி ல்
வழர்மாமுனிக்குபதேசித் த

அழகா திருவாவினன்குடிக்காசேமுறையோ வுமக்கிது
அதிதீரா அதிவீரா அதிகாரா அதிசூரா
எதிர்வாராய் விழிநேராய் மதிதாராய் துயர்தீராய்

அலைகொழிதடமொடுவயல்களு ம்
பலபொழில்எழில்மிகவேணி றை
நலைநகர் தருமலிங்கன்தமி ழ்
மலரணிபுயசரஹணப வ வந்துந்தன்

துதி கழிநெடில் விருத்தம்

எராறுமுகவனே யீராறுகையனே யெளியனிடுமுறைகளுனது
எழிலாரு பனிரெண்டு செவியிலோர் செவியிலும்ஏர்க்கவிலையோ
வெனய்யா

வாராருகுவிமுலை மடந்தை குஞ்சரிவள்ளி மாதிருவர்மிசைநேக்கமோ
வஞ்சமிகு சூரனொடு வாதாடியே வென்று வந்ததோராயாசமோ
பாராதியெங்குமுளர் கொண்டாடு மருணகிரி பாடல்மீதிற் கவனமோ

பண்டிதனெனப்பெயர் கொண்டதால் நோயாழூர் பக்கம்நின்
மனமுற்றதோ
நீராருமேனியா குக்குடக்கொடி கொண்ட நீலக்கலாபமயிலோய்
நித்தனேமெஞ்ஞானமுத்தனே தென்பழனி நெடியவேல் முருகேசனே

---

இராகம் கமாஸ் தாளம் ரூபகம்

பல்லவி

தண்டாயுதா மனம்
தழுராதுபொய்கழராதுமெய்யுளரேசெறிபழனுபுரி தண்டா

அனுபல்லவி

கொண்டலளவுங் குன்றினிலொளிர்
கோவிலில் மேவியசேவற்கொடியோனே தண்டா

சரணம்

கச்சிக்காடிய காமதகனன்
களிக்கும்பாலா யெவர்க்கும்மேலா
ரச்சிகவல்ல சுயப்பிரகா சா
நயமொழிவள்ளி குஞ்சரிநே சா
நாராயணிமகனே நீறுசெழிலக னே
யீரார்புயகுகனே யேமாறுமுக னே
நறவார்விரை வுறைமாமலர்
நிறைசேவடி விரைவே கொ டு தண்டா

கிரவ்வருந்தி துதிக்க வன் று
கிழவனுகிப்பழமையா ன
வீரசோழியமெனுமுன் னூ லை
விரைவில்காட்டியே துயரைமீட்டி ய
வீரத்துயர்வேலா நீறக்கணிமே லா
பாரப்புயலோலா சூரர்க்கொருகா லா
வினையேகெட நினையே துதி
யெனையாழ்ததி அரினவோர் மதி தண்டா

வனத்திடை மரமாகிநின்ற வா
வளையலென்றுமே கிழரிவந்த வா
புனக்குறத்தினை தினைமாவுண்ட வா

போற்றுந்தரும லிங்கன் துதிகொண்ட வா
பொன்னிறமயில்வாகா யின்னிலம்கிறையோ கா
கன்னியிருவற்கோகா யென்னுளமுறையூ கா
பிடி தூண்டிட சொடியாரதம்
நொடியேசெலும் படிசெய்திடு ம் தண்டா

---

## செந்தாழம்பூவுந்தேன்கமளும் யென்ற மேட்டு

### பல்லவி கண்ணிகள்

சிங்காரஞ்சேருங்காவடரும் திருப்பரங்குன்றீசனே
துங்காதிருகரனே தொண்டற்கருள் பரனே
துரைப்பெண்மைந்தனே குறப்பெண்சொந்தனே
துதிக்குமெந்தனை மதிக்குங் கந்தனே சிங்கார 1

தந்தாளுங்பாதம்பாவலரின் தமிழ்கிரங்கும்வை வேலனே
இந்தாறுஞ்சேர்சடையோ னிலங்கும் வெள்ளானுடையோன்
யெனுமரன்தரு கனியேயென் குரு
தினமென்னெஞ்சுரு தனமேதண் தரு சிங்கார 2

சந்தோடுந்தாதுஞ்சேர்ந்திலங்கு தனிக்கடம்பந்தாரனே
கந்தா நந்தாகுணவா கானவள்ளிக் கண வா
கடைக்கண் பாரும் இடுக்கந்தீரு ம்
கதியைச்சாரும் மதியைத்தாரு ம் சிங்கார 3

செம்மானம்போ லம்மாகமுள திகழைங்கரன்றன் சோதரா
தர்மலிங்கன் போற்றுங்கண்யா சாமிசிவசுப்ரமண்யா
ஜகத்தினர்பணி மகத்துவம ணி
இகத்தினர்பிணி தகர்த்தபொற்ப ணி சிங்கார 4

---

## இராகம் காம்போதி—தாளம் திசுரஜம்பை

### பல்லவி

திருச்சேவைசெய்யாத தேகம் பவதேகம்

### அனுபல்லவி.

மருக்கமழும் பரங்கிரியில் வாழ் குமரன் மயிலில்வரும் திருச்

### சரணம்

குஞ்சரிக்கி மணவாளன் கோலவள்ளி சேர்தோள ன்
வஞ்ச[illegible]ரர் குலகாலன் வானவர்கட் குபகார ன்
மஞ்[illegible] தவழ்ந்திடும் சோலை மலிகுன்றைக்குடி வாச ன்
த[illegible]மனுந் தருமலிங்கன் தமிழ்மீதில் விசுவாச ன் திருச்

தண்[illegible]றும் கஞ்சமலர் தங்குபொய்கைப் புனலா டி
வெண்ணீறை யணிந்து விண்ணோர் வெற்பை வலமாகவந்து
பண்ணாருந் தளிநுழைந்து பாமகுரு சண்முக னை
கண்ணாரப் பார்த்துயிரு கை முகிழ்த்தியே துதித் து திருச்

---

### இராகம் பைரவி—தாளம் ரூபகம்

மாதுமைமவி மைந்தா கந்தா வா
மூந்த—வரை நெறிபட வறைதீர னே
விரை நற வுறை மலர்த் தார னே மாது

### பல்லவி தொடர்ச்சி

மாமலிவுலகிடை வுறுதுய ர்
அறவருள் புரிமுருகய் யா மாது

மந்தகாச மதிமுகவிலா சா
இந்தவேளைவா ஜோதிப்ரகா சா மாது

மரகதமயில்ப் பரிக்கருக னே
பரவச மருளரீ மருக னே மாது

மதிகதி நிதிபதி கொடு மெய் யா
அதிபிரபலநய குமாரய் யா மாது

வஞ்சமேது பஞ்சைமீ து
தஞ்சம் நீயலாது யே து
மணமலி கடப்ப மாலை யா
கணபதி துணைவனே வேலையா மாது

### அனுபல்லவி

வேதனெல்கக்கா மோங்கிக் குட்டிடந்த வா
வேழம் நடத்தும் ரதமிசை யூர்ந்த வா

காதலி குஞ்சரி வள்ளியைச் சேர்ந்த வா
கற்ற அருணைகிரிக்கென்றும் பார்ந்த வா

கலைமலி நலைநகர் தனில தி
நலமெனனும் தருமலிங்கன் து தி

கார்த்திகை மூர்த்தியே போற்றினே ன்
சீர்த்தியதாய் தொளுதேற்றினே ன்

காவா கலியுகவரகா நி னை
தேவாதி னம்பவேனு னு னை மாது

---

இராகம் தன்யாசி—தாளம் ஆதி

பல்லவி.

வருவனோ வாரானோ வள்ளி மணாளனிங் கே வரு

அனுபல்லவி

பருவமறிந்து வந்தென் பரிதாபம் தனைதீர்க் க வரு

சரணம்

ஆறண்டை மரத்தைப் போ ல்
அரியண்டை வேழம் போ ல்
நரமொண்டா மலரைப் போ ல்
நலியுமெந்தனைக் காக்க வரு

நீரில்லா மகரம் போ ல்
நிதியில்லாத் தனவான் போ ல்
காரில்லா முளையைப் போ ல்
கலங்குமெந்தனைக் காக் க வரு

தருமலிங்க தாச ன்
தமிழ்மிசை விசுவாச ன்
திருப்பரங்கிரிவாச ன்
தியங்குமெந் தனைக் காக் க வரு

---

பச்சைமாமலைபோல் மேனி—என்ற மெட்டு

இராகம் தன்யாசி அல்லது நீலாம்புரி—தாளம் ஆதி

பத்தியாய் நன்னீராடி பாங்குடன் ஆலயத்தை
சுத்தியே வலம்வந் தோர்கள் துன்பத்தை துடைத்தாட்கொண்ட
வெற்றி மாமயில்மீதேறும் வேலனே விபுதர் கோவே
சித்தம் வைத்தெனை யாளய்யா தென்பரங்கிரி யுள்ளானே 1

கண்டதார் உன்போல்தெய்வம் காவிறைமகள் தன்காந்தா
தெண்டனென் துயர்கொய் தென்றும் சுகமருள் போககாதா
தண்டணி கரனைபண்டு சம்பந்தனுன ஞான
பண்டிதா யெனையாட் கொள்வாய்பழனி மாமலையுள்ளானே 2

சந்த்ரனேடரவாரக்கை சடைமிசை சூடியீன்ற
கந்தனே கடம்பந்தாரா கானமானினைச்சேர் தீரா
மைந்தன்யான் வலியவேடன் வலைதனிலுழலுமான் போல்
சிந்தை நோமெனை யாட்கொள்வாய் திகழ்சோலை மலை
யுள்ளானே 3

சந்ததம் யென் அன்னை தந்தை சற்குரு நான்போற்றுந் தெய்வம்
உந்தனை யல்லாலேது உலகை நின்னடிமையாக்கும்
விந்தை யாரறிவாரய்யா வேலனே தருமலிங்கன்
செந் தமிழலங்கள் சூடும் செந்திமா நகருள்ளானே 4

காமமே வருமைக் கெல்லாம் காரணமெனத் தெரிந்தும்
பாமரனேன் என்மேல் பச்சம்வைத்தெனை யாளய்யா
மாமனை துடைத்தோனுசை மருகனே முருகாவந்தாள்
சோமனை தடவும் சோலைசூழ் தோகை மலையுள்ளானே 5

பூதலம்புரக்கவந்த புண்ணியா மறைகள் தேர்ந்த
வேதனை ஒல்கக்குட்டி வெஞ்சிறைவைத்த சாமி
நாதனீ கெதியென் றெண்ணி நம்பினே னெனையாள் உந்தன்
சீதள மலிதாள்யீய்வாய் திருச்சென்னி மலையுள்ளானே 6

வாரணம் ஒலிக்கும்வேலை வளைபுவியுள்ளர்கள் போற்றும்
பூரணப் பொருளே ஞானபோதனே புனுகோடு பன்
நீரணிந்திடும் மார்பா ஒம்நித்தனே எனையாள் நாளும்
காரணம் மிகவிளங்கும் கழுகுமாமலை யுள்ளானே 7

இராகம் பியாக்—தாளம் ஏகம்

பல்லவி

ஆனந்தம் பரமானந்தம் ஆனந்தம்

அனுபல்லவி

ஆனந்தம் பரங்குன்றினில் வாழும் மெய்
ஞானபண்டிதன் துதியல்லாது வேறுண்டோ ஆனந்

சரணம்

பந்த பாசவினை யாவையும் போக்கும்
பவையாறாறு மயக்கத்தை நீக்கும்
சந்ததஞ் சான்றோர் உறவை யுண்டாக்கும்
ஜனனமரண அறப்பொருள் தேக்கும் ஆனந்

சங்கரன் றனக்கு பதேசித்த சீலனை
சரவணைதனில் வந்தசண்முக வேலனை
மங்கை மீனும்பிகை மகிழ்தரும் பாலனை
மனமகிழ்வோடு கொண்டாடிப் பாடுவர்க்கே ஆனந்

நாராயணன் றினமன்புறு மருகனை
நதிவளஞ் சேரா வினங்குடிக் கருகனை
பேரார் தருமலிங்கன் றுதி முருகனை
பேணிக் கொண்டாடியே பேசப் பேசத்தினம் ஆனந்

---

இராகம் கானடா—தாளம் ரூபகம்

பல்லவி

தோகையேப் பசுந்தோகையேறிய சுப்ரமண்யனைக் கூடிவா தேடி

அனுபல்லவி

நாகமீதொளிர தளியமர்ந்திடும்
நயசண்முக குக நாத நீதனை தோகை

சரணம்

மோக சாகரத்திடையிலே சிக்கி
முளிக்கும் மென் றுயரொளிக்கும் படியந்த
நாகமணி யரன் பாலனென்ன வருந்

நந்தாமலர்க் கடப்பந்தா ரணையடி
நாடி நயமொழி பாடி அவரைக்கொண்
டாடி நறுமலர் சூடி துதிசெய்து — தோகை

காலபய நமக்கணுகிடா வணங்
காக்கு முருகனை கண்ணன் மருகனை
பாலன் தருமலிங்கனைப் புரந்தருள்
பண்டாரமெனச் சொல் தண்டாயுதக்காரன்
பாரபுளகிதமணி விசாகனை
சூரர் கெடவயில் தொடுத்த யூகனை — தோகை

---

வங்கார மார்பிலணி—யென்ற திருப்புகழ் மெட்டு

சிங்கார மானசிகை மீதுமலர் சூடி யொளி
மங்காத தோடு மிரு காதில் ரவி போலமினச்
செண்டோவலாதுகிண மோகுமிழியோ வெனிமிர் — தனமீதே

கண்டோர்க ளாசையுற வேதாள மாலையொடு
யிந்தார மேபுரள நீலவிழியே சுழல
கண்டோத மேதிகழ வாடும்விலை வேசியர்தம் — வுறவாலே

வெகானலூடு புளுவாகி மெழுகாகி யுட
லங்கூனியே குறுகியே மெலி வுருமலருள்
விண்டாதி தேவர்துதி ஜோதி வடிவே யெனது — குருநாத

இங்காரு நீயலது வேறுகதி கூறடியர்
பங்கானி றுடல்தனையே சொலவலா ரெவர்சொல்
யென்சாமி நாதனெனவே பழநிமே விவழர் — பெருமாளே

---

இராக சுதாரச—யென்றமெட்டு

பல்லவி

வா குமராகுகா நீ தயவோடு
வந்துன் பூத்தாள் தரவே — வா குமரா

அனுபல்லவி

யூகா வாகா யோகா யேகா நீறணியங்கா — வா குமரா

சரணம்

சரவணபவ முத்தா சாமிலோகா தீஸ்பரா
திருநலூர் தருமலிங்கன் தினம் போற்றும் தேவா விரைவே வா குமரா

---

ஸ்ரீ ராம ஜெயம்.

# ஸ்ரீ ராமர் பேரில் கீர்த்தனை.

ஆடமோடி கலதேரா—என்ற மெட்டு.

பல்லவி

பூவைதேவகி குமாரா புயபார பூவை

அனுபல்லவி தொடர்ச்சி

சேவை தரவாவே
தினகர குலநிதி திடமலி ரகுபதி சேவை

ஜெகமேவிய உயிர் அகமே குடிகொள்ளும்
இகநாத நீயெனும் ரகுநாதனே உந்தன் சேவை.

திடவெர்ப்பினையொரு நொடியிற் குடைசெய்த
கடகப்புயனே யென் இடறை பொடி செய்து சேவை

தெண்டிறையும் வளை மண்டலமும் புகழ்
புண்டரீகன் துதி கொண்ட கோதண்டனே சேவை

தேவருக்கமுதளித்த ஜீவரச்சகனெ நத்து
மா வலக் கரம்பிடித்த வா வரந்தாத் துதித்தேன் சேவை

சரணம்

அரிபரந்தாமா ஆயிர நாமா ஆரணுதி யோர் போற்றும்
அத்தி துதித்திட அத்தரி வந்துநல் முத்தி கொடுத்திடு சத்திச
கோதரா

அலை கடலிடை அரவணை மிசை சயனனே
அடிய வருளமதில் குடி கொளும் நயனனே
அருள ரங்கா தருமலிங்கன் தமிழலங்க லணியுமங்கா
அந்த மிகுந்த சுகந்த முகந்திடு பூவை

---

இகநாத்தோவா தேலரா—என்ற மெட்டு

இராகம் மோகனம்—தாளம்ரூபகம்

பல்லவி

திருவார் மோகன வேசா பாண்டுரங் கேசா
செழி நலே தளிவாச திருவார்

அனுபல்லவி

அறுமா முகன்றன் மாமா அன்னை ஜானகி பூமா
மருவார் துளபத் தாமா வர்ம மென்மே லாமா

வனச மலரயன்றனைப் பயின்ற மெய்யா
தினசர குலசீதரா கோதண்டக் கையா

சித்தந்தனை வைத்துன் திருவடி
யைத்தந்தரு ணித்தந் துதிசெய திருவார்

சரணம்

மதுரபாடனப்பிரியா வாதிப்பர்தன் சரியா
வணங்கு மன்பர்க் குரியா மாத்வாரகா புரியா
மிதிலே ஜனகன் முன்னால் வில்லே யொடித்த மன்னு
வேண்டும் தருமலிங்கன் விளங்க வருள் சற்ஜனு
வீரா வசுரசம் மாரா வெந்துய ரொழி ததி
நாராயண கதி தாராய் யெங்கணு மிக மதி

ரிகரி ரிகசரி சசரி சதபதசா
சசரி ரிகசரி கபக தபகரி ததபகரி தபகரி
கபதசரி கரிசதப சதப கதப கரிச திருவார்

---

இராகம் கமாஸ் தாளம் ரூபகம்

பல்லவி தொடர்ச்சி

பாண்டு ரங்கனை வேண்டுநீ—மனமே
பரிபுர நவமணி யொலிதற விரிசிற குடை
கெருடனில் வரு பாண்டு

பசுந்துளப மணிந்தபுய விஷங்கொளர
உகந்த நய பாண்டு

பண்டு தந்தி முறையிட வருள்புரி
கொண்டல்வண்ண னெனுமெழில் முராகரி பாண்டு

பவங்களை முழுவது மகனறேடிடும் தவங்கள்
நமக்கென்னும் கைகூடும் பாண்டு

பண்டு புண்டரீகன் செய்த தொண்டினுக் குகந்த பரனே
அண்டர் வறுமை நீக்கி யமுத முண்டிட கொடுத்த வனே பாண்டு

பாடி யாயர்மனை தனி லெங்கு மோடி வெண்ணெ யுள
உரி தனை நாடியள்ளி யுண்டு சிறுவரோடு கூடி தினம் விளையாடிய பா

பஞ்சவர் கனுளடைந்த சஞ்சலத்தை தயே தவிர்த்த
மஞ்சு வண்ணனை இலக்குமி கொஞ்சு சால கோல மாலே பாண்டு

பலமிகு தாடகை ராவண னவன் னுட னவன்
குலமுழுவதுமற மடி ரகுவீரனை
தலமுயர் மிதிலையில் இதுபெரும் மலையெனும் சிலையொடி தீரனே பா

பத்தர் மூத்தர் சித்தர் மெய்த்த வத்தர் நித்தம் துத்தியஞ் செய்
கத்தனை கா குத்தனை மாசுத்தனை யோகதில் மிகு பாண்டு

அனுபல்லவி

காண்டீபன் றனக்கினிய தோளன் கல்லைப் பெண்ணுருவாக்குந்
தாளன்

நீண்டபுகழ் ராமசாமி குணாளன்
நித்தமகிழுறச் செய் மணவாளன்

நீலமயில் மீதில் வரும் வேல்முருகன் மாமன்
கோலமலி கோசலை குமார பரந் தாமன்
ஆலிலையின் மீதினி லாரோகணஞ்செய் சோமன்
சீலநலை தர்மலிங்கன் செந்தமிட் பூந் தாமன்

சித்த சனைத்தரு சீதரன்
சத்தி தனக்கு சகோதரன்
முத்தி வழிக்கி நலாதரன்
உத்தமர் மெச்சு கிர்பாகரன் பாண்டு

வரமுலசகி—என்ற மெட்டு பல்லவி

திருவடி கொடு ஜே விடலா ~~ஜெக~~ நாத கல்யாண திரு

அனுபல்லவி

கருடனிலேர் கரிவாதா கமல மின் மணாளனே நின் திரு

சரணங்கள்

திடமலி தாடகை சம்மார
திகழயோத்தி துரைகுமார
வடமலையா மனதிலையா
வரத்தொலையா என் சொலையா
விடமலி பாம்பணை யுடையா
வீரமேவுங் கவிப்படையா
கொடைமலி நலத் தருமலிங்கன்
கூறும் தமிழ் சிங்காரனே உன்
பத பப மக மப மம கரி
கம கக ரிச ரிக ரிரி சனி
சா தனி சா சாசரி கம ரீ ரிக
மப கா கப்பத மா மபதனி பா
பதனிசா தனிசரி கமகரி
சரிசனி தபமப பமகரி சரிகம திருவடி

---

காக்ஷிக்கண் காக்ஷியே—என்றே மட்டு

பல்லவி

கண்டா லானந்தமே கண்ணன் பாண்டு ரங்கனை கண்டா

அனுபல்லவி

தண்டுளபத் தாரணி கோதண்ட கான் முண்டகத் தாள் கண்டா

சரணம்

அங் கங்கிருந்து அணி அணியாய் வருவார் கூடி
அப்பன் ஜெய விட்டலன் அம்பொற்றளியை நாடி
எங்கே பார்த்தாலும் ராமநாமங்கள்ப் பாடிப் பாடி
ஏற்றிடும் பஜனையைப் பார்க்கக்கண் வேணுங் கோடி
மங்கள மேள வாத்தியச் சங்கொலிகள் விண் ணேடி
மை மண்டலங்கள் மதிமண்டலமுமூ டாடி
சிங்க முழக்கம் போலத் திக்கானே காதிற் சாடி
சிந்தை மிகமயங்கித் திகைத்திடுமென்ன சொல்வேன்

தேவருக்கும் யாவருக்கும் யீசன் வுயர்
பாவலர்க்கும் நாவலர்க்கும் நேசன் நல்ல
பைந்தமிழ் தருமலிங்க தாசன் சொல்லும்
பாடல் தனிமேல மிகுவிஸ் வாசன்

பாரதிக்கு மாமன்
பரிதிகுல சோமன்
தாரகநன் னாமன்
ஜானகிதன் பூமன் தனை கண்டா

---

சுஜனஜீவனா—என்ற மெட்டு

பல்லவி

கருடவாகனா ராமா கமலலோசனா—ராமா கருட

அனுபல்லவி

கருணை பூசனா முர ஹரி தர்பாசனா
திருமங்கள கரசுந்தர தசரதன் சுதா—ராமா கருட

177695

சரணம்

சாலதோத்ர பாடமேஸ்த்ர மாநலைச் சேத்ரா
தாரணியோர் துதிசெய் புண்யா ததியருள் கண்யா
சாலசீலவா பூதகிசமாரகா
சார மோடுறை தருமலிங்கன் தமிழலங்கல் மன் நாதா கருட

---

மாதங்க முகனே—என்ற மெட்டு

பல்லவி—இராகம்—சுருட்டி

காளிங்க நடனா வருவாய் வரந்தரக்
கண்ணா மணி வண்ணா கருடன்மிசை காளிங்க

அனுபல்லவி

தாளிணை தினந்துதி தமியனுக் கருள்ததி
தாக்கிட்டத் தக்கிட்டத் தரிக்கு தரிக்கிட்டத்த
தஜ்ஜணுத தத்திமித்த தகு குகு ஜம்தரி
தரித்த தரித்தஜெணு ஜெணுத்த ஜெணுத்த திமி
திமித்த திமித்தகிட்ட கிட்டத கிட்டதகிட
தகதிகி தகததிங்கிணத்தொம் திகிதக ததிங்கிணத்தொம்
தகததிங் கிணத்தொம் ததிங்கிணத்தொம் கிணத்தொம்
தொம்மென காளிங்க

### சரணம்

சர்ம ஜடாதரி சத்தி சமேகாதரா
தரணிதரா சர்வ ஜீவர்கட் காதரா
சுந்தராஞ் செறிநல்லை வந்தருள் சீதரா
தொண்டன் தருமலிங்கன் துயர் கொய்தா மோதரா

தொம் தொம் கிட்டதக நம்நம் கிட்டதக
தொங்கிட்ட கிட்டதக நங்கிட்ட கிட்டதக
தாக்கிட்ட கிட்டதக தரிக்கிட்ட கிட்டதக
தாதாகிட்டதக தகிடத தஜணுத
தகததிங்கிணத்தொம் ததிங்கிணத்தொம்
கிணத்தொம் தொம் தொம்மென — காளிங்க

---

தசரத ராஜகுமாரா--என்ற மெட்டு

### பல்லவி

குணமணி கோசலை சேயா அன்பர் நேயா சம்ர தாயா துவர் வாயா

### அனுபல்லவி

மணமிகு பூங்குழல் ஜானகி — காந்தா
வளமலிந் தோங்கு மய்யோத்திக்கு — வேந்தா
பணவுர கசயனு பஞ்சவர் — பாந்தா
பச்சம் வைத்துனது கண்பாராய் ரகுவீரா அருள் தாராய் ரண
தீரா — குண

புணரியின் மேல்ப் பள்ளி கொண்டிடும் — புண்யா
பூதகி தன்னுயிர் போக்கிய — கண்யா
பணவிடை கிருபை நீசெய்வாய் லா — வண்யா
பவமற வருள் பரந்தாமா ரகு ராமா வர்ம மாமா ரதிமாமா
கருமலி யுலகிடை வருந்துறேன் — காவா
கருட வாகன மிசைவா பத்ம — நாபா
திருநலை தர்மலிங்கன் தினந்துதி — தேவா
ஜெய விட்டலனே செம்பொற் பாதா மாவி நோதா பிரக்யாதா
மதி சூதா — குண

---

சோம சுந்தரனே—என்ற மெட்டு

பல்லவி

ராமச்சந்திரனே என் நாத சீத பாத மேதா ராமச்

அனுபல்லவி

காமபாச வினையை நீக்கி
கண்ணனை என் கவலை போக்கி
சேமமுற நின் திருக்கண் ணோக்கி
சேவை தாரும் கோவே வாரும் ராமச்

சரணம்

தஞ்சமென் னுமை வருக்குப் பாந்தவா
தக்க புகழயோத்தி வேந்தவா
வஞ்ச கஞ்சனுயிரைக் காய்ந்தவா
வாதை தீரும் சீதை சேரும் ராமச்

துக்க கோதண்டந் தனைப் பிடித்தவா
துஷ்ட ராவணன் பகை முடித்தவா
மங்கை ஜாநகி தனை மடித்தவா
வாதென் மீது ஏது ஓது ராமச்

திருநலை வந்த பாண்டு ரங்கா
ஜெய விட்டலனே திருவ ரங்கா
தருமலிங்கன் தமிழ்ப்பா சங்கா
சால துங்கா நீல வங்கா ராமச்

---

சன்னதி விசேடமே—என்ற மெட்டு

பல்லவி

நித்திய கல்யாணனே நின்பதம் பெறுயர்
நேய தூயா நின் சேவை கொடா தேனினம் நித்திய

அனுபல்லவி

நத்தி லங்கிடுஞ் செங் கையா
நம்பு மடியார்க்கு மெய்யா

பத்த னென்பதுவும் பொய்யா
பலகலை யுணர்ந்த வலரென திகழ்ந்த
புலவர்கள் வனைந்த நலதமிழ் புனைந்த நித்திய

சரணம்

வேத னெந்தையே முன் வாரும்
விரைந்தென் கவலை தீரும்
ஆதவர் குலா கண் பாரும்
அஞ்சிலை யொடித்த நின்சர ணடுத்த
பஞ்சவர் தொடுத்த வெஞ்சமர் முடித்த நித்திய

தார் புகழ் நல்லூரு கந்த
தர்மலிங்கன் போற்ற வந்த
கார் முகில் வண்ணனே முந்த
கடலிடை கடைந்த வுடனதி லெழுந்த
தடமுலை மடந்தை கடிபுரி முகுந்தா நித்திய

---

மருகேலரா—என்ற மெட்டு

பல்லவி

மதுசூதன வா ராகவா மதுசூதன

அனுபல்லவி

இது வேளை பாரா முகமேனோ கூறாய்
இறையோன்றன் சுதா கான மோகன மதுசூ

சரணம்

நல்லை வாழ் விட்டலா நம்படியர்க் கென்றும்
செல்வமீயுங் கண்ணா திருமடந்தை மன்னா
புல்லர் நேய மகல புண்ணியா செய் தமிழ்
சொல்ல லங்கல் சூடுந் தர்மலிங்கன் துதி மதுசூ

---

இராகம் கதன குதுகலம்—தாளம் ஆதி

பல்லவி

கதன குதுகலராக கவன
கஞ்சமல ராச்சி காந்தனே கடாக்ஷி கதன

அனுபல்லவி

மத ராவணன் மாழ தேவர் வாழ
வாளியே வுத்தண்ட மற்புய கோதண்டா கதண

சரணம்

கதிர் குலவேந்தா காண்டீபன் பாந்தா
காகுத்தா கோவிந்தா கண்ணனே வைகுந்தா
மதி தோயுஞ்சோலை மலைவாழ் முகுந்தா
வசுதேவன் மைந்தா வணங்கன்பர் சொந்தா

வாரணமேலவி வீரையிலே துயில்
மாதவா சீதரா பார்வதி சோதரா
தாரணியோர் துதி நாரணனேபரி
பூரணனே அதி காரணனே எழில்

தருவளைதனை யழகிய காமிசையணி
சருவ தயாபரனே திகழ் நவமணி
தவமதி வலருயர் தருநலைக் கருகனே
யெவரும் மகிழவருள் யிறையே தருமலிங்கன்

ஏற்றிடுந் தமிழ லங்கல்
சாற்றிடும் புயனே துயர்
மாற்றிடுஞ் சமயமிது
மங்கள மெங்கு மிலங்கு சங்கீத கதண

---

எதிரே வரவேணும்—என்ற மெட்டு

பல்லவி

வரமே தரவேணும் மாதவமெயன திடமற வரமே

அனுபல்லவி

துறை ராஜா வரதா துவாரக புரிநகர்க் கருகா துறை

துளைச் சங்கமதை வளச்செங்கை யணி துறை

தூய வன்பர்கள் நேயசம் பிரம துறை

துடியசுரர் மடிய சரம் விடுதிரனே துறை

தூதனே சூதனே நீத விநோதனே துறை

தும்பியும் வெம்பி யியம்பு மொழிக் கருள்
துங்கநீல வங்க பொங்கரங்க வரமே

சரணம்

சீதபாத ரெகு நாதனே கருடன் மீதிலேவரு மா
ஜீவாதார ஜெகம் நிறைந்த புண்யா
மிதுலையிறை மகளணைந்த கண்யா
சீலமண்டி தீமைகண்டி
சிலையை வுருசெய் யுனையே அண்டி
சேவையே செய் தேவர் குழாங்கள் மகிழும்
செங்கண் மாலே ரங்கா தர்மலிங்கன் செந்தமிழ் ப்ரசங்கா
சீராருநலே நெறி யார்ஜெயவிட்டலனே வரமே

---

ஷண்முகா ஏழை என்மேல் தயவிலேயா—என்ற மெட்டு

பல்லவி

தஞ்சம் வேறேது கண்பார் தாணிதரா
தாரக நாமா ரகுராமா அருள்வாய் யென்னய்யா தா

தந்தியின் துயர்தனை தீர்த்த வா
குந்தியின் புதல்வரைக் கார்த்த வா தா

தடபுயா வடவிலே மிசை துயில்
திடனே திண்சிலேதனை குடைசெய்த தா

தசரதன் புரிதவ பாலனே
பஜனை செய்பவர்க் கனுகூலனே தா

தம்பிக் கரசளித்த தயோதரா
நின் பொற் பதம்கொடுத்தருள் சீதரா தா

ஜனகன்மகள் மருவு திண்டோளா
சமயம் கெருடன் மிசை வந்தாளாய்
பனகமிசை நடமிடுந் தாளா
பணியு மெனது குறையுங் கேளாய் தா

அனுபல்லவி

வஞ்சிமா மோகத்திலே மட்டுப்பட்டுத் தட்டுக்கெட்டு
வருந்தா தென் ஞகத்திலே மாசுகத்தையே கொடுத்து
தேசுபொற்பதாம் புயங் கொடாய்
மதுமொழி ருக்மணி யுடனெழில் சத்திய பாமையையே
கொஞ்சி யேபாகத்திலே கொண் டன்பாயமர் காகுத்தா
கெடியவனென வுறை சண்டன்பய மறுப்பாய் கர்த்தா
தருமலிங்கன் சொல் வண்டமிழணி வரதா நித்தா
வளமலி நலேயுறை தாணிதரா

---

மாதர் பிறைக் கண்ணியானை—என்ற மெட்டு

பாண்டுரங்கப் பெருமானே நல்லை
பைந்தளி வந்த மிசங்கேமேன
வேண்டு மன்பருள்ளத்தானே விரி
பூதல மெங்கும் பூத்தோனே
நீண்ட துளைக் காவானே துயர்
நீக்கிய பாக்கிய வானே
ஆண்டவனை யருள் வானை நினை
அல்லும் பகலும் நீதானே 1

தா னென்ற ஆணவம் போக்கி தம்பூர்
தாளம் ஜாலர் கையில் தூக்கி
தீனதயாளனை நாக்கில் தினம்
சிந்தித் துள்ளம் தெளி வாக்கி
ஞானேனந் த்ரியந்தன்னை தேக்கி என்றும்
நல்லோ ருறவை யுண்டாக்கி
மானமிகும் பாண்டுரங்கா வென
வாழ்த்தி வணங்கு நீ நெஞ்சே 2

நெஞ்சமே பூவழுந்தானை நடு
நேமியின் மேற்றுயின் றானை
கஞ்சன் நெஞ்சை வகிர்ந் தானை விட
காளிங்கன் மேல் நடித் தானை
அஞ்சொடு மூ வெழுத் தானை அன்று
ஆலிலை மேலமர்ந் தானை
பஞ்சாயுதக் காப் பாண்டு ரங்கன்
பாத மென்றும் பணி வாயே 3

---

சோந்தாரு பூங்கணையினால்—என்ற மெட்டு

பல்லவித் தொடர்ச்சி

கண்ணவுன் காக்ஷி தா வே ஒண் தருமணி கண்ணு
வண்ணா வருவாய் விரை வே கண்ணு
கடவிடை வாசனே கரிதுயர் நாசனே
காமனைப் பயின்ற ரகு ராமனே பகந்துளபத் கண்ணு
தாமனே ரதிதனக்கு மாமனே இது சமயம்
கான மானென் விழி தேனே நேரு மொழி கண்ணு
ஜானகி மருவு தீன ரக்ஷகனே
கஞ்ச னெனுங் கொடு வஞ்சக மாமனே கண்ணு
நெஞ்சை வகிர்ந்திடு மஞ்சனே யங்கனே
கம்பமதத் தும்பி துதிக்கின்ப மருள் சம்ப்ரமனே கண்ணு
நின் பெருமை யன்புடனியம் பெனது துன்ப மற

177695

கதிநீயே யலதாரபிராமி
களிப்புறுஞ் சோதரனே யிந்த பூமி
துங்கபுரி சீதரனே ராமசாமி
சுகமுற வினை வரதமு மருள் நேமி — கண்ணா
கருணை மிகுசு கவுசலை தருஞ் சுதனே
கரிய கல்லை யுருவாக்கு பொற் பதனே
தருமலிங்கன் மொழி தமிழலங்கல் புனை
சரந்தனை யடியர் பாந்தனை கமலக் — கண்ணா

சரணம்

காலபய மணுகிடாது செய் முராஹரி
கந்த மலிந்திடு பைந்துளபந் தனை
அந்த மிகுந்த புயந்தனிலே புனை
சுந்தர இந்திரன் மைந்தன் ரதந்தனை
முந்த நடத்து முகுந்த வைகுந்தனே
கதிர் குல மரபினில் வருதிரு நவமணி
களிப்பொடு நின்னை வழிப்படு மென்னை
உகந்தருள் வாய் முகுந்த னேமா
காமனைத் தரு சோமனின் புகழ்
கண்டவ ரெவரென்னையா தொண்டருள்ளத் துறை மெய்யா
மண்டலத்தை யுண்ட துய்யா பண்டமுதளித்த கையா — கண்ணா

---

கல்லார்க்கும் கற்றவர்க்கும்—என்ற மெட்டு

தண்டாடும் அலைமலிந்த சாகரத்தின் நடுவே
சயன மிடுந்தனி முதலை தமியேயனை யாதரியே
வண்டாடும் பூங்கமல மலர்மின் மணவாளா
மருப்பொலியுந் திருத்துளப மாலையணி தோளா
கொண்டாடு அடியருள் ளக்குறையகல வென்றே
கோல மலிந்தோங்கு நல்லைக்கோவில் வந்த கோவே
பண்டாதி மூலமென்ற பகடை வந்தா தரித்த
பாண்டு ரங்கா யான்பகரும் பாடலுகந் தருளே

பொன்னுலுக் கதி விருப்பமுள்ள பரம்பொருளே
புங்கவர்க்கன் றமுதளித்த புண்ணிய லாவண்யா
நின்னுமந்தனைத் தினமும் நினைக்கு மன்பருளமே
நெறி யெனக்கொள் கரிவரதா நீலவண்ணா கண்ணா
மின்னார் தன்னுறவதனை விலக்கி யெனைக் காவாய்
வேதனையந் நாட்சிறை செய் வேலவன்றன் மாமா
பன்னுக மிசையுகந்த பரிதி குலத்தரசே
பாண்டுரங்கா வேண்டுமெந்தன் பாடலுகந்தருளே

மங்களம்! மங்களம்!! மங்களம்!!!




அருப்புக்கோட்டா பிரிண்டிங் பிரஸ்,
காசுக்கடைபஜார்,
அருப்புக்கோட்டை

1930